2014 ஜூலை 31]

வழங்கி வருகின்றார்கள். இன்னும் செயல்படாத ஆலைகளையெல்லாம் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 294, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

294—

மீனவர்களுக்கு வீடுகள்

***5079—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் உள்ள நலிந்த உள்நாட்டு மீனவர்களுக்கு 2004-2005 ஆம் ஆண்டு முதல் இதுவரை 221 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகம் கிழிந்துடல் காட்டி மறைந்திடும் மின்னலைப்போல, ஒரு மணித் துளி நேரத்தில் மக்கள் பிணியினைத் தீர்த்து வாகை சூடும் வெற்றித் திருமகளாம்!*

தமிழ் மணம் கமழ்ந்திட தரணியாளும் தமிழ் மண்ணின் தவப்பயனாம் எங்கள் தாயே! எங்கள் தமிழ் மண் கண்டெடுத்த பொன் மாதா! நின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உள்நாட்டு மீனவர் குடும்பங்கள் சுமார் 20 கிராமங்களில் வசிக்கின்றனர். பெண்ணேஸ்வரமடம், மாரிகவுண்டன் சவலூர், தளிப்பட்டி, நெடுங்கால், தட்ரஅள்ளி போன்ற 20 கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, கட்டித் தரப்பட்ட வீடுகளுக்கு என் தொகுதியினுடைய உள்நாட்டு மீனவ மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது பர்கூர் தொகுதிக்குட்பட்ட 20 கிராமங்களில் வாழுகின்ற பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பசுமைத் திட்டமான பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், ரூ.2,10,000/- மதிப்பீட்டில் கட்டித் தரப்படுகின்ற பசுமை வீடுகள், உள்நாட்டு மீனவ மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், நாங்கள் நித்தம் வணங்குகிற எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள அவருடைய தொகுதிக்குட்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கட்டி முடிக்கப்பட்ட 221 வீடுகளின் விவரம்: வீரமலை-33 வீடுகள், பெண்ணேஸ்வரமடம் - 118, செல்லம்பட்டி கூட்டு ரோடு-3, தட்ரஅள்ளி-37, மாரிசெட்டிஅள்ளி-1, பண்ணந்தூர்-5, பாரூர்-22, விளாங்காமுடி-1, மருதஹள்ளி-1. பர்கூர் சட்டமன்றத் தொகுதி, போச்சம்பள்ளி வட்டத்திற்குட்பட்ட மீனவர்கள் கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள காவேரிப்பட்டினம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அவற்றில் பர்கூர் தொகுதிக்குட்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 300 மட்டுமே. இவர்களில்

2014 ஜூலை 31]

221 மீனவர்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பகுதிக்குட்பட்ட மீனவ உறுப்பினர்களிடமிருந்து புதிதாக வீடு வேண்டி இதுநாள்வரை மனு ஏதும் பெறப்படவில்லை. மேலும், வீடு வேண்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் மீனவர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறைமூலம் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் சட்டமன்றத் தொகுதி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியது. காவேரிப்பட்டினம் மற்றும் பர்கூர் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடங்கியும்தான் இந்த மீனவர் குடும்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோர மீனவர்கள் பெரும் புயலாலும், மழையாலும் பாதிக்கப்படும்போதும், அவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்ய முடியாமல் இருக்கிற மீன்பிடித் தடைக் காலங்களின்போதும், அரசு அவர்களுடைய குடும்ப வாழ்வாதாரத்திற்கும், ஜீவாதாரத்திற்கும் உதவி செய்து வருகிறது. உள்நாட்டு மீனவக் குடும்பங்கள் பருவமழை தவறுகிறபோதும், மழையில்லாக் காலங்களில் வறண்டு கிடக்கிற ஏரிகள், குளங்கள், குட்டைகள் ஆகியவற்றில் நீர்வரத்து இல்லாதபோதும் மீன் வளர்ப்புத் தொழிலைச் செய்ய இயலுவதில்லை. மீன் வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்புத் தொழிலையே நம்பி வாழ்கிற இந்த உள்நாட்டு மீனவ மக்களுக்கும், கடலோர மீனவர்களுக்குக் கிடைக்கிற குடும்ப நல உதவித் தொகையைப்போல மீன்பிடித் தொழில் செய்யாத காலங்களில் அரசு உதவி செய்ய, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 31

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான கேள்வி மீனவர்களுக்கு வீடு கட்டித் தருவது பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன்பிடித் தடைக் காலத்தில் கடலோர மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையைப் போன்று உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்கப்படுமா என்று கேட்கிறார். இதற்கான பதிலை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பலமுறை சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 11-05

பர்கூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் 300 உறுப்பினர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆக, 221 மீனவர்களுக்கு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. மீதம் இருப்பது 79 நபர்கள். அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் வந்தால், ஆய்வு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் வாயிலாக அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோர மீனவர்களுக்கு 45 நாட்கள் மீன்பிடித் தடைக் காலமாக இருக்கின்றது. இது மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டம். உள்நாட்டு மீனவர்களுக்கு அப்படிப்பட்ட சட்டம் ஏதும் இல்லை. வருடம் முழுவதும் அவர்கள் மீன் பிடித் தொழில் செய்யலாம். மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்கள், மீனவர் நல வாரியத்தின் உறுப்பினராக இருந்தால் அந்த மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களுக்கான சிறப்பு நிவாரணத் தொகையைப் பெறலாம். எந்த அரசும் செய்யாத சாதனையாக மீனவர்களுக்கு மழைக்காலங்களில் ரூபாய் 4,000/- வழங்குகின்ற சிறப்புத் திட்டத்தை அறிவித்து அவர்களுடைய வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, உள்நாட்டு மீனவர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்கள் மீனவர் நல வாரியத்திலும் உறுப்பினர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் அந்தச் சிறப்பு நிவாரணத் தொகையைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், கடல் மீன் பொருட்களை வாங்கி விற்பவர்களாக அந்த மீனவர்கள் இருக்க வேண்டும்

2014 ஜூலை 31]

என்றுதான் விதி இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 295, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

295—

தனி அடையாள அட்டை

***12257—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தனி அடையாள அட்டை வழங்கும் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தனி அடையாள அட்டை வழங்கும் பணியை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேசிய மக்கள்தொகை பதிவேடு, உயிர் புள்ளியியல் Biometric Ennumeration கணக்கெடுப்புப் பணி ஜூன் 2011 முதல் தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. தேசிய மக்கள்தொகை பதிவேடு, உயிர் புள்ளியியல் கணக்கெடுப்புப் பணியில் 5 வயது மற்றும் 5 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு உயிர் புள்ளியியல் ஆகியவை பல்வேறு கட்டங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. இப்பணி Bharat Electronics Limited, Bangalore நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாடு மக்கள் கணக்கெடுப்புப் பணி இயக்குநர் அவர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. இந்நேர்வில், பணி முன்னேற்றம்